kanton glarus

பெற்றோருக்கான தகவல்

# அரசினர்பள்ளியின் கற்பித்தலுக்கும் மதிப்பீடு செய்வதற்குமான கிளாரஸ் பாடத்திட்டம்

**அன்பான பெற்றோர்களே**

**அரசினர் பள்ளிக்கான கிளாரஸ் பாடத்திட்டம் உங்கள் பிள்ளை எவ்வாறு அறிவையும் திறமையையும் பெறமுடியும் என்பதை விபரிக்கிறது. இதன் அடிப்படையில், உங்கள் பிள்ளையின் தரம் முழுமையாக மதிப்பிடப்படுகிறது. இந்த ஊக்குவித்தல் சார்ந்த மதிப்பீடு உங்கள் பிள்ளையின் வெற்றிகரமான கற்றலில் முக்கிய பங்கு வகிக்கிறது.**

ஆசிரியர்கள் பாடத்திட்டத்திற்கு அமைய கற்பிக்கிறார்கள், அத்துடன் அவர்களின் பாடத்திட்டம் திட்டமிடல் மற்றும் கற்பித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கற்பவர்களின் செயல்திறனை ஆசிரியர்கள் தவறாமல் சரிபார்க்கிறார்கள். வகுப்பறையில் கற்றுக்கொள்ள வேண்டியவை பரீட்சைகளுக்கான அடிப்படையாக அமையும். மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை பற்றி தெரிந்துள்ளார்கள். திறன்கள் வெவ்வேறு வழிகளில் சோதித்துப்பார்க்கப்படுகின்றன:

- வகுப்பின் போது அவதானிப்புகள்
- மாணவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள்
- திட்டவிபரங்கள், மாணவர்களுக்கான வேலைகளின் குறிப்புகள்
- வகுப்பிலும் பரீட்சையிலும் திறன்கள் .

ஆசிரியர்கள் பெறப்பட்ட தரவுகளை ஒன்றாக இணைத்து தேர்ச்சி அறிக்கையில் தரங்களை காண்பிக்கிறார்கள்.

மதிப்பீடு மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கவும் ஆதரிக்கவும் உதவுகிறது

## முழுமையான மதிப்பீடு

பள்ளி மாறுபட்ட கற்றலை செயல்படுத்துகிறது. மாணவர்கள் பல்வேறு பாடங்களில் (ஜெர்மன், கணிதம், இசை மற்றும் பிற) தொழில்நுட்ப மற்றும் இடைநிலை திறன்களைப் பெறுகிறார்கள் (சுயாதீனமானவர்களாக, பிறருடனும் அத்துடன் ஒரு அணியிலும் பணிபுரிகிறார்கள்).

முடிந்தவரை பல திறன்கள் வகுப்பில் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கு சிறப்பான பணிகள் தேவைப்படும்.

**நல்ல பணிகள்:**

- சவால் நிறைந்தது
- அறிவுக்கேற்றதாக இருப்பது
- திறனுக்கேற்றதாக இருப்பது
- சுயாதீனமாக இருக்க ஆதரவு தருவது
- கற்றலில் ஆதரவு தருவது
- வேலையில் ஆதரவு தருவது.

**«முழுமையான மதிப்பீடு வெற்றிகரமான கற்றலில் கவனம் செலுத்துகிறது»**

**மதிப்பீடு என்பது...**

**...பாடத்திற்கு பொருத்தமானதாக இருக்கும்**
ஒவ்வொரு மதிப்பீடும் வகுப்பறையில் கற்றல் சூழ்நிலைகளிலிருந்து பெறப்படுகிறது.

**...ஊக்குவித்தலுக்கு முக்கியத்துவம்**
மதிப்பீடுகள் மற்றும் பின்னூட்டங்கள் உங்கள் பிள்ளையின் கற்றல் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துகின்றன, மேலும் அடுத்த கற்றல் படிமுறைகளைக் குறிப்பிடுகின்றன.

**...வெளிப்படையானது**
வருடாந்த சந்திப்பின் போது, உங்கள் பிள்ளையின் கற்றல் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து உங்களுக்கு அறிவிக்கப்படும்.

**...விரிவானது**
அறிவுத்திறன் மற்றும் இடைநிலை திறன்கள் மதிப்பீட்டில் செல்வாக்கு செலுத்துகின்றன.

## வருடாந்த கலந்துரையாடல்

பெற்றோர், பிள்ளை, ஆசிரியருக்கு இடையே ஒரு வருடாந்த கலந்துரையாடல் நடைபெறுகிறது. இந்த வருடாந்த சந்திப்பில் அவதானிப்புகள் மற்றும் மதிப்பீடுகள் தொகுக்கப்படுகின்றன. கற்றல் மற்றும் வளர்ச்சியின் நிலை குறித்து நீங்கள் ஆசிரியரிடமும் உங்கள் பிள்ளையுடனும் உரையாடுகிறீர்கள். இதற்கு நல்ல முன்தயாரிப்பு தேவை. உங்களின் சொந்த அவதானிப்புகள் மற்றும் கருத்துக்களை இதன்போது நீங்கள் எடுத்து வரலாம்.

வருடாந்த கலந்துரையாடலுக்கு தயாராகும் போது உங்கள் பிள்ளை ஆசிரியர்களிடமிருந்து ஆதரவைப் பெறுவார்.

© 2021 · Departement Bildung und Kultur · Abteilung Volksschule · www.gl.ch

வழக்கமான முறையில், மாணவர்கள் குறிப்பிட்ட நடவடிக்கைகள் அல்லது விசேடமான பள்ளி நடைமுறை இல்லாமல் பள்ளியில் படிப்பை தொடருகின்றனர். எவ்வாறாயினும் ஆதரவு தேவைப்பட்டால் இவை பற்றி வருடாந்த கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டு பள்ளி நிர்வாகத்திடம் கோரப்படலாம்.

**எடுத்துக்காட்டாக செயற்பாடுகள்:**
- பள்ளிகளில் சிகிச்சையளிக்கும் கல்வி மூலமாக ஆதரவு
- இரண்டாம் மொழியாக ஜெர்மன் கற்றல் (DaZ)
- பேச்சு சிகிச்சை
- மன ஆளுமை மேம்பாடு
- கற்றல் நோக்கங்களை சரிசெய்தல் அல்லது விலக்களித்தல்

**பள்ளி நடைமுறை மாற்ற முடிவுகளாக அமைபவை:**
- விசேட கவனிப்பு அல்லது சிறிய வகுப்பில் அனுமதி
- ஒரு வகுப்பில் மறுபடியும் கற்றல்
- ஒரு வகுப்பை கடந்து கற்றல்
- மேல் வகுப்பு I ல் (Sek) தரங்களில் மாற்றம்

## தேர்ச்சி அறிக்கை

இது உங்கள் பிள்ளையின் செயற்திறனை முழுமையாக விபரிக்கிறது, அத்துடன் வருடாந்த சந்திப்பு நடைபெற்றது என்பதைக் காட்டுகிறது.

மழலையர் பள்ளி மற்றும் முதலாம் வகுப்பில் தேர்ச்சி அறிக்கையில் புள்ளிகள் இருக்காது. இதில் பள்ளி உறுதிப்படுத்தல்தான் இருக்கும். 2 வது வகுப்பு முதல், உங்கள் பிள்ளை ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் கற்றல் செயல்திறன் மதிப்பீடு செய்யப்படுவதன் மூலம் தர அறிக்கையை பெறுவார்.

மேல் வகுப்பு I ல், மாணவர்கள் ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் ஒரு தேர்ச்சி அறிக்கையை பெறுவார்கள்.

5 வது வகுப்பிலிருந்து, மேலதிக திறன்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்கள் தேர்ச்சி அறிக்கையில் குறிப்படுகிறது. இவை வேலை, கற்றல் மற்றும் சமூக நடத்தை என்று அழைக்கப்படுகின்றன.

ஒரு பள்ளி ஆண்டின் காலத்தில் ஏராளமான மதிப்பிடப்பட்ட மற்றும் மதிப்பிடப்படாத மதிப்பீட்டு சந்தர்ப்பங்கள் உள்ளன.

உங்கள் பிள்ளை இந்த தகவல்களில் சிலவற்றை வீட்டிற்கு கொண்டு வருவார் அல்லது அதைப் பற்றி சொல்வார். ஆசிரியர்கள் கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களையும் பயன்படுத்தி, அவற்றை கணிப்பிட்டு, தேர்ச்சி அறிக்கையில் தரங்களை குறிப்பிடுகிறார்கள். பகுதித் தரங்களின் எண்கணிதச் சராசரி அடிப்படையில் தேர்ச்சி அறிக்கையில் புள்ளிகள் குறிப்பிடப் படுவதில்லை என்பதே இதன் பொருள் ஆகும். அவை சம்பந்தப்பட்ட பாடத்தில் மாணவர்களின் எழுதப்பட்ட, வாய் மூலமான மற்றும் நடைமுறை செயல்திறனை அடிப்படையாகக் கொண்ட ஒட்டுமொத்த மதிப்பீட்டைக் குறிக்கின்றன.

© 2021 · Departement Bildung und Kultur · Abteilung Volksschule · www.gl.ch